பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 03 சனிக்கிழமை (19 - 08 - 2000) VALAMPURI ஒலி: 243

★ வேட்பு மனு 28-4ஆம் திகதி வரை

★ தேர்தல் ஒக்ரோபர் 10ஆம் திகதி

★ 18ஆம் திகதி புதிய பாராளுமன்றம்

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டது

## வர்த்தமானிமூலம் ஜனாதிபதி அறிவிப்பு!



(கொழும்பு அலுவலக நிருபர்)

சுதந்திர இலங்கையின் பத்தாவதுபாராளுமன்றம் நேற்றுநள்ளிரவு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவினால் கலைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி நேற்று வெளியிட்டுள்ளார்.

இம்மாதம் 28ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் தமது மனுவைத் தாக்கல் செய்யலாம் என்றும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்றும் 18 ஆம் திகதி பதினோராவது பாராளுமன்றம் கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பத்தாவது பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை அடுத்து அரசியல் கட்சிகள் தேர்தலுக்கான ஆயத்தங்களை சுறுசுறுப்பாகச் செய்து வருகின்றனர்:

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து பதினோராவது பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு

### வேட்புமனு தாக்கல்

இம்மாதம் 28ம் திகதி முதல் அடுத்த மாதம் 4ம் திகதி வரை வேட்புமனுக் தாக்கல் செய்யலாம். இதற்கான தேர்தல் ஒக்ரோபர் மாதம் 10ம் திகதி நடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நீதியான தேர்தலுக்கு வழிவகுக்கவும்!

(கொழும்பு)

பத்தாவது பாராளுமன்றம் நேற்று நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டதை அடுத்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

## லெப். பாலசூரியா மரணம்

★ சட்டவிரோதமாக

## இத்தாலி செல்ல இருந்த 31 தமிழர் பேருவளை கடலில் கைது

சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்குச் செல்ல முனைந்த 31 தமிழர்கள் பேருவளை கடற்பிரதேசத்தில் வைத்து பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 31 தமிழர்களும், பேருவளை, கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

★ பயணிகள் கப்பல் சேவை

## குறைந்த கட்டணத்துடன் 4 ஆயிரம் பயணிகளுக்கு இன்று ரிக்கெற் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்குமான விசேட பயணிகள் கப்பல் சேவை ஒன்றை குறைந்த கட்டணத்துடன் யாழ். பிரதம சிவில் நிர்வாக காரியாலயம் ஒழுங்கு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை விரைவில் சிங்கப்பூர் பயணம்

(கொழும்பு)

பத்தாவது பாராளுமன்றம் நேற்று நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டதை அடுத்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

அரசியல் அமைப்பையும் ஜனாதிபதி ஆட்சி முறையையும் ஒழிக்க முடியாத நிலையில் நேற்று பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார்கள் என்று ஐக்கிய (8 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர் பட்டியல் ஞாயிறன்று

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து நாளை ஞாயிற்றுக்கிழமை கட்சி கூடி தேர்தல் தொடர்பாக ஆராயவுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் புளொட் போட்டியிடவுள்ளது இதற்கான வேட்பாளர் தெரிவு தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை முடிவு செய்யவுள்ளோம் என்று புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (வ)

## ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் நடத்தப்படவேண்டும் ஜனநாயக வழிக்கு திரும்பியவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஆயுதங்களுடன் நடமாடுவதை தடைசெய்ய வேண்டும் என்றும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (8 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணியின் சார்பில் போட்டியிட வன்னிப்பகுதியில் பலர் விருப்பம்

(வவுனியா அலுவலக நிருபர்)

வன்னி மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடுவதற்கு பலர் முன்வந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிடுவதற்கு 16 பேர் விண்ணப்பித்திருப்பதாகவும் அவ்விண்ணப்பங்கள் அடுத்தவாரம் பரிசீலிக்கப்படும்என்றும்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(8ஆம் பக்கம் பார்க்க)

## லெப். பாலசூரியா மரணம்

(வவுனியா அலுவலக நிருபர்)

கடந்த புதன்கிழமை மாலை வவுனியாநகர சபை மண்டப வாசலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் படுகாயமடைந்த வவுனியா இராணுவ முகாமைச் சேர்ந்த (8 ஆம் பக்கம் பார்க்க

## வன்னியில் மிக் விமானம் குண்டு வீச்சு

(வவுனியா)

வன்னிப் பகுதியில் நேற்றுக் காலை விமானப்படைக்குச் சொந்தமான மிக் 27 ரக விமானங்கள் குண்டு வீச்சுத் (8ம் பக்கம் பார்க்க)

## விரைவில் சிங்கப்பூர் பயணம்

(யாழ்ப்பாணம்)

பொதுநலவாய அமைப்பு பல்கலைக்கழகங்களின் ஆதரவில் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள பல்கலைக்கழக துணைவேந்தர்களின் மாகநாட்டுக்கு யாழ். பல்கலைக்கழக துணை (8 ஆம் பக்கம் பார்க்க

## புதிய இராணுவத் தளபதி பல்லேகல 24ம் திகதி பதவி ஏற்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தளபதி மேஜர்ஜெனரல் லால் வீரசூரியா இளைப்பாறுவதை அடுத்து பல்லேகல இம்மாதம் 24ம் திகதி புதிய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்கிறார்.

மேஜர் ஜெனரல் பல்லேகல 1965ம ஆண்டு இராணுவத்தில் சேர்ந்து வவுனியா யாழ்ப்பாணம் இராணுவத் தளபதியாகவும், இராணுவ தலைமையகத்தின் கட்டளை இடும் அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார். (வ

# வன்னியில் பத்து அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் குதிக்கும்

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது வன்னி மாவட்டத்தில் பத்து அரசியல் கட்சிகள் களத்தில் குதிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி., புளொட், ரெலோ, ஈ. பி. ஆர்.எல். எவ். இன் வரதர் அணி, சுரேஸ் அணி ஆகிய தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தனியே போட்டியிடவுள்ளன.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இரண்டு இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர் எனவும் எனினும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே தேர்தல் நடத்தப்படுமெனவும் தெரியவருகிறது. (ந)

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

## கொட்டடியில் இளைஞர் கைது

[யாழ்ப்பாணம்]

கொட்டடியில் வைத்து கடந்த 13 ஆம் திகதி இளைஞர் ஒருவர் ஊரெழு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொட்டடியைச் சேர்ந்த குருசுமுத்து மரியதாஸ் என்பவரே கைதானவராவர் இவரின் கைதுக்கு ரசீது வழங்கப்பட்டுள்ளது:

இதேவேளை குருநகரைச் சேர்ந்த சூசை இம்மானுவேல் ஜெபராஜ் கடந்த 13 ஆம் திகதி ஊரெழு இராணுவ முகாமில் வைத்து கைது செய்யப்பட்டு 15 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

[க-12]

### மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில்

# கலந்துகொண்ட யாழ். மாணவருக்கு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

## கூட்டத்தில் இணக்கம்

[யாழ்ப்பாணம்]

வடகிழக்கு மாகாண, மாகாணமட்டவிளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக கடந்த வருடம் திருமலை சென்ற மாணவர்களுக்கான கொடுப்பனவு வழங்க மேற்படி மாகாண கல்வி அமைச்சு செயலாளர் க. பரமேஸ்வரன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்:

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

கல்வியமைச்சுச் செயலர் மேலும் தெரிவிக்கையில்; குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் முடிவுறாத கட்டடங்கள் தொடர்பான விவரங்களை அதிபர்கள், ஆசிரியர்கள் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் தலைமையில் சேகரித்து அவ்விபரங்களை அரச அதிபருக்கும், கல்விச் செயலருக்கும் அனுப்ப வேண்டும்.

ஆளணிப் பற்றக்குறை மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் பற்றாக்குறை குறித்து அதிபர்களால் பிரஸ்தாபிக்கப்பட்ட போது, இந்த வருடத்துள் பாடசாலைகளுக்கு கல்வி சாரா ஊழியர்களையும், ஆசிரியர்களையும் போதியளவில் நியமிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை தற்சமயம் பாடசாலைகளில் அமைய ஊழியர்களாக கடமை புரிவோரை நிரந்தர நியமனமாக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது:

தீவகத்தில் ஆசிரியர்கள் தட்டுப்பாடு குறித்து தீவகப் பகுதி அதியர்கள் சுட்டிக்காட்டியபோது, தீவுப்பகுதி ஆசிரியர்களாக அங்கு நியமனமாவோர் சிறிது காலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம் மாறுவதாலும் இந்நிலை ஏற்படுவதாகவும், எனினும் புதிதாக நியமனமாகும் ஆசிரியர்கள் தீவுப்பகுதிக்கே நியமனமாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ். கனகரெட்ணம் மகா வித்தியாலய அதிபர் தமக்கு வழங்கப்பட்ட கணனி பழுதடைந்தது எனத்தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து, பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணனிகளில் பழுதிருப்பின் அதை இங்கேயே திருத்த வேண்டுமெனவும், அவ்வாறு முடியாவிடின் அவற்றை கொழும்புக்கு அனுப்பும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமெனவும் கல்வியமைச்சு செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளையில் மாகாண சபையிலிருந்து கடிதங்கள் தமதமாக வருவதனால் யாழ். மாவட்ட மாணவர்கள் தமிழ், ஆங்கில தினப் போட்டிகளில் மட்டுமல்லாது மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பையும் இழக்கின்றனர் என யாழ்.

JCIT

Obtain Open university Exemptions with our Diplomas!

**The following courses will commence in early September.**

**Computer Courses:**

1. Advanced Diploma in Computer programming & data processing Contains Excel 2000, Visual Basic (6.0), C, dbase, Assembly Language Fees: 4500/- (One - year full time)
2. Diploma in Computer Programming & data processing Contains Excel 2000 Visual Basic (6.0), Pascal, Access 2000 (One - year full time) Fees: 4000/- (Syllabus covers curriculum for NCCA examinations)
3. Certificate course in business applications (Morning & Evening)

★ MS Word 2000 ★ Pascal
★ MS Excel 2000 ★ Visual Basic
★ MS Access 2000 ★ FoxPro
★ Power Point ★ C/C++
(3 Months) Fees: 1000/- each

4. Australian computer society examinations (all 4 parts) (ACS) (6 Months) Fees: 2000/-
5. British computer society examinations Fees Rs 1500/- each module (BCS) Certificate level & Diploma level
6. Certificate Course in Computer Hardware (Morning & Evening — 6 months Fees: Rs. 2000/-
7. Bachelor of Information Technology (BIT)

## நாளை பரீட்சை

[சங்கானை]

ஆண்-பெண் இருபாலாருக்குமான தாதி பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சைநாளை 20 ஆம்திகதி காலை 9 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைவரும் நாளை காலை சமூகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

[த-16]

## நூல் வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

சித்தன்கேணி சமூக தொழில் நுட்ப கல்வி நிலைய மாணவர் மன்றத்தினரால் இன்று சனிக்கிழமை கொம்ரெக் மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு 'அறிவோசை' சஞ்சிகை வெளியீட்டு விழா நடத்தப்படவுள்ளது:

வி. பிரணவயூகன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் ஆசியுரையினை சிவஸ்ரீ சு. சுந்தரராஜ குருக்களும் நூலின் வெளியீட்டுரையை த. கலையரசனும் அறிவோசை மலரின் ஆய்வுரையை மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனும் நிகழ்த்தவுள்ளார்கள். (க)

## பொது உளச்சார்பு பரீட்சையும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பொது அறிவும் பொதுஉளச்சார்பும்'பயிற்சிப் பரீட்சை'யும் கருத்தரங்கும் நடாத்தப்படவுள்ளதாக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரி லியோ கழகமும் வடமாகாண அதிபர் சங்கமும் இணைந்து நடாத்தும் மேற்படி பரீட்சையும் கருத்தரங்கும் 21 ஆம் திகதி காலை 9 00 மணிக்கு பருத்தித்துறை திரு இருதயக் கல்லூரியில் காலை 9.00 மணிக்கும் வட-இந்து மகளிர் கல்லூரியில் காலை 10.00 மணிக்கும் இடம்பெறும்:

இதேவேளையில் 20 ஆம் திகதி காலை 9.00 மணிககு

Certificate level & Diploma level
6. Certificate Course in Computer Hardware (Morning & Evening — 6 months Fees: Rs. 2000/-
7. Bachelor of Information Technology (B I T)

Technical Courses

8. Craft Courses (will include basic introduction to computers)
(தமிழ் மொழி மூலம்)

- ☐ Mechanical Craftsman ship Practice — (Fees: Rs. 1450/-)
- ☐ Electrical Wiring & Installation Practice — (Fees: Rs. 1450/-)
- ☐ Auto Mobile Technology (Basic Car Driving will be taught) (Fees: Rs. 1450/-)
- ☐ Radio & T. V. Servicing — (Fees: Rs. 1500/-)

9. Technician Certificate Course in

- ☐ Basic Engineering (Covers all desciplines of Engineering) - 18 months
- ☐ Electronics & Telecommunications — 1 year - (Fees; Rs. 3000/-)
- ☐ Civil Draftmanship — 1 year — (Fees: Rs. 1250/-)

10. Diploma in Electronics & Telecommunications - 3 years - (Fees Rs. 4575/-)

I Enough Practical Classes given
II Facilities Library, Sports & Hostel
III Collect application forms at our centre or Jaffna College Undergraduate Department, Hospital Road, Jaffna.
iv Submit your applications directly or by post.

**Director,**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

[இ - 719]

ஆங்கில தினப் போட்டிகளை மட்டுமல்லாது மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பையும் இழக்கின்றனர் என யாழ். மாவட்ட பாடசாலை அதிபர் சங்க தலைவர் க. இராசதுரை குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் அரச அதிபர் க. சண்முகநாதன், பாராளுமன்ற உறுப்பினர்களான தவராசா, கே. வீ. குகேந்திரன், ந. மதனராஜா, திட்டமிடல் அமைச்சு செயலர் எஸ். ரங்கராஜா, மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ். சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-3)

கல்லூரியில் காலை 10.00 மணிக்கும் இடம்பெறும்.

இதேவேளையில் 20 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியிலும் 10.00 மணிக்கு மருதனார் மடத்தில் இயங்கும் தெல்லிப்பழை யூனியன்கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

பரீட்சையைத் தொடர்ந்து கருத்தரங்கு நடைபெறவுள்ளதால் உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இச் செயற்பாடு மிகுந்த பயன் உடையதாக இருக்கும் என்றும் அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

[க]

# கைதிகளை சந்திக்கும் நடவடிக்கை இவ்வாரம் இடம் பெறவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு வாரந்தோறும் புதன்கிழமைகளில் காங்கேசன் தடுப்பு முகாமிற்கு மேற்கொண்டு வரும் கைதிகளை சந்திக்கும்நடவடிக்கைவாகன வசதியின்மையால் இவ்வாரம் இடம் பெறவில்லை.

இவ் ஆணைக்குழுவின் வாகனம் கடந்த வாரம்முதல் பழுது பட்டிருப்பதினாலேயே இவ் வாகன வசதியின்மை ஏற்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

[க 12]

## இன்று கணபதி ஓமம்

நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் கணபதி ஓமம் இன்று சனிக்கிழமை இடம்பெற உள்ளது.

காலை முதல் நண்பகல் வரை நடைபெறும் இந்நிகழ்வில் வேத ஆகம சிவாச்சாரியர்கள் பலர் கலந்து கொள்வர்.

நாளை ஞாயிறு சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (க)

# 18 இலட்சம் கருச்சிதைவுகள்

# இலங்கையில் இடம் பெறுகின்றன

## வைத்திய அதிகாரி தகவல்

(மட்டக்களப்பு)

ஒவ்வொரு வருடமும் இலங்கையில் 18 இலட்சம் கருச்சிதைவுகள் இடம் பெறுகின்றன உலகில் 450 இலட்சம் கருச்சிதைவுள் இடம் பெறுகின்றன.

உலகில் கர்ப்பத்துடன் சம்பந்தப்பட்ட காரணங்களினால் 6 இலட்சம் பெண்கள் உயிரிழக்கின்றனர்.

இவ்வாறு மட்டக்களப்பு தாய்,சேய் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டபிள்யு வில்லியம் வெளியிட்டுள்ள இனப்பெருக்க சுகாதாரம் என்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

மேற்கூறப்பட்ட மரணங்களில் 2இலட்சம் பேர் போதிய குடும்பத்திட்ட சேவைகள் இன்மையால் இறக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் 10 லட்சம் பேர்பாலியல்தொடர்பான நோய்கள் மற்றும்இனப்பெருக்க உறுப்புக்களில் ஏற்படும் தொற்று என்பவற்றினால் இறக்கின்றார்கள்.

இதேவேளை இலங்கையில் விவாகமான 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட பெண்களில் 70 வீதமான பெண்கள் கருத்தடைப்பாவனையில் ஈடுபட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சு60

## எதிர்வரும் செவ்வாய்க்கிழமை

# நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தம் கல்வி சாரா ஊழியர் முன்னெடுப்பு

[கொழும்பு]

கல்வி உயர்கல்வி அமைச்சினால் பல்கலைக்கழக கல்விச் சீர்திருத்த திட்ட அறிக்கை தனிச் சிங்களத்தில் வெளியாகி இருப்பதை எதிர்த்து எதிர் வரும் செவ்வாய்க்கிழமை ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களும் இவ் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவர்.

பல்கலைக்கழக கல்விச் சீர்திருத்த அறிக்கையினை மும்மொழிகளிலும் வெளியிடக்கோரியும் 20 பக்கங்கள் அடங்கிய அவ் அறிக்கையினை வாசித்து அறிவதில் உள்ள இடைஞ்சல்கள் குறித்தும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கும் சம்பந்தப்பட்டோரால் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ)

## ஆரம்ப ஆசிரியர் நியமனத்தில்

# பல்கலை மாணவர் இடம் பெறுவது உறுதிப்படுத்தப்படின் சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தற்போது வழங்கப்படும் ஆசிரியர் நியமனத்தில் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் இடம் பெறுவது உறுதிப்படுத்தப்பட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடிக்கப்படும்.

இவ்வாறு நேற்றைய தினம் யாழ் மத்திய கல்லூரியில் இடம் பெற்ற குறை கேள் சேவையில் கலந்துகொண்டு உரையாற்றியகல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் சுமார் ஆயிரத்து ஐநூறு பாதிக்கப்பட்டவர்கள ஆரியகுளம் சந்தியிலுள்ள உயர் கல்வி நிறுவனத்தில் ஒன்று திரண்டு யாழ். மத்திய கல்லூரியை ஊர்வலமாக சென்றடைந்தனர்.

ஆரம்ப நெறிஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் உரையாற்றியஅவர் ஆரம்ப நெறிக்குவிண்ணப்பித்தவர்களுக்கு கட்டம் கட்டமாக நேர்முகப் பரீட்சை நடைபெறும். இத்தெரிவுநிச்சயம் அவர்கள் பெற்ற உயர் புள்ளிகளின் அடிப்படையிலேயே இருக்கும் எனத் தெரிவித்தார்.

உலக வங்கியின் அனுசரணையுடன் இடம் பெறும் இந் நியமனத்தில் திறமைமிக்க ஆசிரியர்களை உருவாக்குவதே எமது நோக்கம் என்றும் தெரிவித்தார்.

நேற்றைய இடம் பெபர் சேவையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் கல்வியமைச்சு செயலரிடம் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். (க-12)

# 1வது பெண் பிரதமர் சிறிமாவுக்கு பிரியாவிடை வைக்காதது ஏன்?

## ரேணுகாகேரத் எம்.பி கேள்வி

(கொழும்பு)

உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெயரைப் பெற்ற பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு பாராளுமன்றத்தில் பிரியாவிடைவைக்காதது ஏன் என்று ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரேணுகா கேரத் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பி இருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்தஆறுவருடங்களாகப் பிரதமராகப்பதவிவகித்தசிறிமாவோ பண்டாரநாயக்காவின் சேவைகளைப்பாராட்டி பிரியாவிடை வைபவத்தை அரசாங்கம் ஒழுங்கு செய்யாததுஏன்?

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா உலகின் முதலாவது பெண் பிரதமமந்திரி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [வ]

## அன்னதானம்

(புலோலி)

தென்புலோலி மூச்சம்பலம் சிவன் ஆலயத்தில் நடைபெற்று வந்த திருவிளையாடற் புராணபடன பூர்த்தி விழா அர்ச்சனைப் படன படிப்பு நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைகிறது மறுநாளான 21 ஆம் திகதி அன்னதானமும் 22 ஆம் திகதி நந்திமடையும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

# மக்கள் குறைகேள் செயலமர்வு நேற்று யாழ். மத்திய கல்லூரியில்

## பிரமுகர்கள் பலரும் சமுகமளித்தனர்

(தென்மராட்சி)

வட-கிழக்குமாகாணசபையும் ஈ.பி.டி.பியும் யாழ்.மாவட்ட செயலகமும் இணைந்து நடாத்திய மக்கள் குறைகேள் செயலமர்வு நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச் செயலமர்வின் போது யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, மற்றும் கே. விகுகேந்திரன் (ஜெகன்), வி.தவராசா, வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜி. கிருஸ்ண மூர்த்தி., யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைத்தனர்.

மக்கள் குறைகேள் செயலமர்வு காலை 10 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் நான்கு மணிக்கு முடிவடைந்தது. இச் செயலமர்வில் பங்கு கொள்வதற்காக வடக்கு கிழக்கு மாகாணசபையில் இருந்து 22க்கு மேற்பட்ட அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோல யாழ். மாவட்டத்தில் இருந்தும் திணைக்கள, சபை மற்றும் கூட்டுத்...

மாகாணசபையின் பிரதம செயலாளர் ஜீ. கிருஷ்ண மூர்த்தி, கல்வி, விளையாட்டு அலுவல்கள் விவகார அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன், யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் ஆகியோர் கேட்டு அறிந்துகொண்டனர். (க-08-12-78)

## இராசி பலன்

19-8-2000
(ஆவணி 3 (சனி)
சதுர்த்தி
பி. ப. 1. 28 வரை
உத்தரட்டாதி
காலை 6.39 வரை
இராகுகாலம்
9.05-10.35
சுபநேரம்
3.05-4.35

சங்கடகர கணபதிவிரதம்

**மேடம்**
பிரயாணம், குடும்பக் கவலை, பணச்செலவு

**இடபம்**
பொருள் வரவு, சுபசெய்தி, கீர்த்தி

**மிதுனம்**
பாராட்டப்படல், அலைச்சல், நட்டம்

**கடகம்**
மனக்கவலை, காணிப்பிரச்...

## வருடாந்த மஹோற்சவம்

[அரியாலை]

வட்டுக்கோட்டை அராலி மேற்கு கோட்டைக்காடு நொச்சியம்பதி அருள் மிகு விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 28ம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும் 29ம் திகதிசெவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. [செ-106]

# 'அழியும் கோலங்கள்'

யாழ். மத்திய கல்லூரியை (க-12)

# 'அழியும் கோலங்கள்' சிறுகதை நூல் வெளியீடு

(புலோலி)

புலோலியூர் க. தம்பையா எழுதிய 'அழியும் கோலங்கள்' சிறுகதை நூல்த் தொகுதி வெளியீட்டு விழா நாளை ஞ ாயிற்றுக்கிழமை தென் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் இளைப்பாறிய பிரதிக்கல்விப்பணிப்பாளர் வீ. எஸ். ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை சன சமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி வரவேற்புரை நிகழ்த்த புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோ. ஜெயபாலசுந்தரக்குருக்கள் ஆசியுரை நிகழ்த்துவார்.

யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜசுந்தரம் நூலை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரையை நிகழ்த்துவார். முதற் பிரதியை வர்த்தகர் ரி. உருத்திரர் பெற்றுக்கொள்வார். யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா ஆய்வுரை நிகழ்த்துவார். யாழ். செயலக நிர்வாக அதிகாரி வி. வீரபத்திரபிள்ளை பாராட்டுரை நிகழ்த்துவார்.

நூலாசிரியர் தம்பையாவின் பதிலுரையை அடுத்து பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பிரதம நூலகர் ஏ. என். எஸ். திருச்செல்வம் நன்றியுரை நிகழ்த்துவார். நூலாசிரியரின் தங்கப்பதக்கங்கள் உட்பட முதல் பரிசுகள் பெற்ற சிறுகதைகள் இச் சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. (ந-55)

---

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி

[அரியாலை]

திருநெல்வேலி காளிகோவிலடி சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் அம்பாள் விளையாட்டுக்கழகம் 19வயதிற்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

இப்போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்களை காளி கோவிலடி சனசமூக நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான முடிவுத்திகதி இம்மாதம் 30ந்திகதி ஆகும். [த-106]

சனி, நட்டம்

**கடகம்**
மனக்கவலை, காணிப்பிரச்சினை, உஷ்ணரோகம்

**சிங்கம்**
உறவினர் பகை, முயற்சி தாமதம், வியாதி

**கன்னி**
களஸ்திரம், பொருள்வரவு உல்லாசம்

**துலாம்**
முயற்சி பலிதம், சந்தோசம் விருந்துபசாரம்

**விருச்சிகம்**
மனச்சஞ்சலம், புத்திரர் கவலை, காரிய வெற்றி

**தனு**
உறவினர் வெறுப்பு, தடுமாற்றம், வாகனசுகம்

**மகரம்**
பணவரவு, பிரயாணம், குடும்ப சுகம்

**கும்பம்**
வாக்குவாதம், செல்வாக்கு, காரியத்தடை.

**மீனம்**
முயற்சி வெற்றி, தேகசுகம், வீண் பகை.

[பழைய நேரப்படி கணிக்கப்பட்டது]

வளவன்

பிடத்தக்கதாகும்.

அதேபோல யாழ். மாவட்டத்தில் இருந்தும் திணைக்களை, சபை மற்றும் கூட்டுத்தாபனங்களின் உயர் அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர். செயலமர்வின் முதல் நாளாகிய நேற்றைய தினம் 16 அறைகளில் 26 பிரிவுகள் இயங்கின. மாவட்டத்தில் பல இடங்களிலும் இருந்தும் பலதரப்பட்ட பொதுஅமைப்புகள் மற்றும் தனியார்கள் பங்குகொண்டு தமது பிரச்சனைகள்பற்றி திணைக்களங்களில் எடுத்துரைத்தனர்.

நேற்றைய தினம் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம், ஆரம்ப ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டவர்களின் சங்கம், குடும்பநல சுகாதார சேவையாளர்கள் சங்கம், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கூட்டுறவு ஊழியர்கள், வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் உட்பட மற்றும் பலர் தமது குறைகளை எடுத்துக் கூறியிருந்தனர்.

நியமனம் வழங்கப்படாமல் இருக்கும் ஆரம்ப ஆசிரியர்கள் சுமார் ஆயிரம் பேர் வரையில் யாழ். மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் ஒன்றுதிரண்டிருந்தனர். இவர்கள் பற்றிய குறைகளை பாராளுமன்ற உறுப்பினர்களான வி. தவராசா, கே. வி. குகேந்திரன் (ஜெனன்)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பரீட்சைத் திகதி மாற்றம் பற்றிய அறிவித்தல்

இரண்டாம் வருட உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு 28-08-2000 திங்கள் அன்று ஆரம்பமாக இருந்த பரீட்சைகள் 29-08-2000 அன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

28-08-2000 நடைபெற இருந்த உடற்கல்வி புள்ளிவிபரவியல் கூடைப்பந்தாட்டம் ஆகியன 05-09-2000 திகதிக்குமாற்றப்பட்டுள்ளது என்பதை சம்பந்தப்பட்ட மாணவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்
([illegible])

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

தென்மராட்சியிலிருந்து யுத்த அனர்த்தத்திற்கு முன்

# இடம்பெயர்ந்தோரும் 2000 ரூபா பெறுவதற்கு முண்டியடிப்பு

## பெருமளவினர் நல்லூரராம்

[தென்மராட்சி]

தென்மராட்சி பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களுக்கு முதல் பல மாதங்களுக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறி யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலக எல்லைகளுக்குள்வாடகைக்கு வீடுகள் எடுத்தும் சொந்தமாக வீடுகள் கொள்வனவு செய்தும் வாழ்ந்து வரும் சில குடும்பங்கள் இடம் பெயர்வு தொடர்பாக அரசினால் வழங்கப்படவுள்ள 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தாமும் பெற்று விட வேண்டும் என்பதில் தீவிர முயற்சி செய்து ஈற்றில் தோல்வியடைந்த நிலையில் இப்போது மௌனித்து இருப்பதாக அறியப்படுகின்றது.

இது பற்றி மேலும் அறியப்படுவதாவது இத்தகைய குடும்பங்கள் எத்தகைய யுத்த கொடூரங்களையும் எதிர் கொள்ளாமல் மிகவும் பாதுகாப்பான நிலையில் தமது அனைத்துரக உடமைகளுடன் மேற்படி இடங்களில் இப்போது தங்கியுள்ளனர்.

இவர்கள தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து வெளியேறி யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களில் குடியேற ஆரம்பித்ததும் தமது குடும்ப அட்டைகளை தாம் குடியிருக்கும் கிராம சேவையாளர்களிடம் பதிவு செய்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இது இவ்விதம் இருந்த போதிலும், 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவைத் தாமும் பெற்று விட வேண்டுமென்பதில் தீவிர முயற்சி செய்திருந்த போதிலும், கிராம சேவையாளர்கள் இவர்கள் விடயத்தில் மிகவும் இறுக்கமாக இருந்துள்ளது பற்றியும் தெரியவருகின்றது.

[க-77]

மட்டக்களப்பிலிருந்து

# அரிவுவெட்டச் சென்ற 8 தமிழர்களை காணவில்லையெனப் புகார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து அரிவு வெட்டுவதற்காக பொலநறுவைக்குச் சென்ற எட்டுத் தமிழர்களைக் காணவில்லையென கல்முனைமனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார் செய்யப்பட்டுள்ளது.

அரிவு வெட்டுவதற்காகச் சென்ற எட்டுப் பேரையும் இனந்தெரியாத வாகனத்தில் வந்தவர்கள் ஏற்றிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ந)

# ஆலய வளவினுள் தரித்து நின்ற மோட்டார் சைக்கிள் மாயம்

[அச்சுவே]லி

ஆலய வளவில் நிறுத்திய மோட்டார் சைக்கிள், வழிபாட்டை முடித்து விட்டு உரிமையாளர் வந்து பார்த்த போது மாயமாய் மறைந்து விட்ட சம்பவம் ஒன்று அண்மையில் அச்சுவேலி தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 13ஆம் திகதி அச்சுவேலி உலவிக்குள பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தின்போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதே பகுதியைச் சேர்ந்த வீ. சிவஞானம் என்பவரே தனது 40ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை இழந்தவராவார்.

இது சம்பந்தமாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கிணங்க, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம், பக்திமான்களும் ஒழுக்க சீலர்களும் உலவ வேண்டிய ஆலயச் சூழலில் திருட்டு நபர்கள் தமது கைவரிசையைக் காட்டி ஆலய அமைதிக்கும், புனிதத்துக்கும் பங்கம் ஏற்படுத்தும் செயல்களை அனுமதிக்கக்கூடாது எனவும் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

[உ-14]

ஐ.தே.க. உறுப்பினர்க்கு,

# லஞ்சம் வழங்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும்

## ஊடகவியலாளர் முறைப்பாடு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு, 15 இலட்சரூபா லஞ்சம் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம்பற்றி முழு விசாரணை செய்யப்பட வேண்டும் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவர் 15இலட்சரூபா இலஞ்சம் பெற்றார் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இக்கூற்றின் அடிப்படையிலேயே ஊடகவியலாளர் குமாரதாஸ கிரிபால லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு இது பற்றி முறைப்பாடு செய்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊழல் நடவடிக்கையில் ஈடுபடுவது மிகப்பெரிய குற்றமாகும்.

இவ்வாறான ஒருவர் மீது தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டின் உண்மை நிலை அறியும் உரிமை மக்களுக்கு இருக்கிறது. இதனால் அவர்களின் சார்பாக மேற்படி முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஊடகவியலாளர் குமாரதாஸ கிரிபால தெரிவித்துள்ளார்.

எழுத்துமூலமான மேற்படி முறைப்பாட்டினை லஞ்ச ஊழல் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

(உ)

# சுரேஸ்-வரதர் அணியை ஒன்றிணைக்க அமைச்சர் அஷ்ரப் தீவிர முயற்சி

[கொழும்பு]

முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணசபை முதல் அமைச்சர் வரதராஜப் பெருமாளையும் சுரேஸ் பிரேமச்சந்திரனையும் ஈ.பி ஆர்.எல்.எப். அமைப்பில் மீண்டும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்எம்.எச்.எம் அஷ்ரப் தீவிரமாய் ஈடுபட்டுள்ளார்.

அந்தவகையில், வரதராஜப் பெருமாளையும் சுரேஸ் பிரேமச்சந்திரனையும் ஒன்றுபடுத்தி அவர்களிடையேயான மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது தனது கடமை என அஷ்ரப் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் வரதராஜப் பெருமாளுக்கும் அமைச்சர் அஷ்ரப்பிற்கு மிடையே அமைச்சரின்உத்தியோகபூர்வ இல்லத்தில் நடை பெற்ற பேச்சுவார்த்தையின் போதே மேற்படி உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுக்களின் போது, வடக்கு - கிழக்கின் இன்றைய நிலை எதிர்காலநிலைமற்றும் அங்கு வாழும் முஸ்லிம்களின் நிலை தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப் பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை,

ஒரே அணியில் செயற்பட்ட சுரேஸ் பிரேமச் சந்திரன், வரதராஜப் பெருமான் ஆகியோரிடையே எழுந்த கருத்து முரண்பாடுகளினால் இரு வேறு அணிகளாகப் பிரிந்து செயற்பட்டதும் தெரிந்ததே.

[உ]

# பொது வேலை நிறுத்தத்திற்கு தோட்ட தொழிலாளர் முஸ்தீபு

## ஆறுமுகம் தொண்டமான் தெரிவிப்பு

[கொழும்பு]

தோட்டத் தொழிலாளர்களுக்கு 400ரூபாசம்பளஉயர்வு வழங்கப்படா விட்டால், தோட்டத்துறைகளில் பரந்த அடிப்படையில் வேலை நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

முதலாளிமார் சம்மேளனமும் பெருந்தோட்டத்துறை அமைச்சும் தோட்டத்தொழிலாளர் சம்பளஉயர்வுவிடயத்தில் அக்கறை காட்டாத பட்சத்தில் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவது தவிர்க்க முடியாததாகிவிடும் எனவும் ஆறுமுகம்தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சகல தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பளமும் ஒரே நியதிப்படியே அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளையில்பொதுசன ஐக்கிய முன்னணி அரசு அறிவித்துள்ள சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டும்.கூட இதுவரையில் வழங்கப்படாததும் இதுவிடயம்தொடர்பாக தோட்டத் தொழிலாளர் மத்தியில் அதிருப்தி நிலை நிலவுவதும் ஏற்

# பொதுசன தொடர்பு அதிகாரி அலுவலகம் வாரத்தில் 2 நாள் ஊர்காவற்றுறையில்

(ஊர்காவற்றுறை)

வேலணை கடற்படை

களை எடுத்துக் கூறியதையடுத்தே இவ் அலுவலகம்

# கந்தர் மடத்தில் வீதி திருத்தம்

[நல்லூர்]

கந்தர் மடம்- குமாரசாமி வீதி, ஆத்திசூடி வீதி, அம்மன் வீதி என்பவற்றின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

நீண்ட காலமாக இவ் வீதிகள் திருத்தஞ் செய்யப்படாத நிலையில் குன்றுங்குழியுமாகக் காட்சியளித்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் வீதிகள் திருத்தப்படுவதால் இது வரை காலமும் மக்கள் அடைந்துவந்த சிரமங்கள் நீங்க ஏதுவாகும் எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்

தில் அக்கறை காட்டாத பட்சத்தில் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவது தவிர்க்க முடியாததாகிவிடும் எனவும் ஆறுமுகம்தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கப்பட்டும்.கூட இதுவரையில் வழங்கப்படாததும் இதுவிடயம்தொடர்பாக தோட்டத் தொழிலாளர் மத்தியில் அதிருப்தி நிலை நிலவுவதும் ஏற்கனவே தெரிந்ததே: (உ)

இவ் வீதிகள் திருத்தப்படுவதால் இது வரை காலமும் மக்கள் அடைந்துவந்த சிரமங்கள் நீங்க ஏதுவாகும் எனப் பொது மக்கள் தெரிவித்துள்ளனர். [க-து]

## வாரத்தில் 2 நாள் ஊர்காவற்றுறையில்

(ஊர்காவற்றுறை)

வேலணை கடற்படை பொதுசன தொடர்பு அதிகாரியின் அலுவலகம் வாரத்தில் இரண்டு நாட்கள் ஊர்காவற்றுறையில் இயங்கவுள்ளது.

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு, வேலணையில் ஒரு அலுவலகமே இயங்கிவந்தது.

மேற்படி அலுவலகத்திற்கு ஊர்காவற்றுறை மக்கள் செல்வதில் உள்ள சிரமங்களை எடுத்துக் கூறியதையடுத்தே இவ் அலுவலகம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை அருகில் இயங்கவுள்ளது.

மேற்படி அலுவலகம் வேலணையில் திங்கள், புதன் ஆகிய தினங்களிலும், ஊர்காவற்றுறையில் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களிலும் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-75)

## பெரும் ஆளணிப்பற்றாக்குறையை எதிர்கொள்ளும் யாழ்.பல்கலை

### துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகம் பெரும் ஆளணிப் பற்றாக்குறையை எதிர் நோக்குவதாகவும் இதனால் பெரும் சிரமங்கள் எதிர் நோக்க வேண்டியுள்ளதாகவும் மேற்படி பல்கலை துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றமாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது 20பேராசிரியர்களுக்கான வெற்றிடமும் 50சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கானவெற்றிடமும்இருப்பதாகவும் மேலும் தற்போதுள்ள விரிவுரையாளர்களில் பலர் விரைவில் ஓய்வு பெற இருப்பதால் வெற்றிடம்மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

மேலும் மருத்துவ பீடம் சீராக இயங்க வேண்டுமானால் யாழ்.போதனா வைத்தியசாலை சீராகஇயங்க வேண்டும். அவ்வாறு இயங்கினாலே மருத்துவ பீடம் தொடர்ந்து இயங்கமுடியுமென்று தெரிவித்தார்.

மேலும் திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தை மறுசீரமைப்பதன் மூலம்விவசாய பீடத்தை சிறந்த முறையில் இயக்க முடியுமென்று தெரிவித்தார். (சு-3)

## கிராமசேவையாளரின் முயற்சியால் இடம்பெயர்ந்த பலருக்கு இருப்பிடவசதி

(வடமராட்சி கிழக்கு)

இடம்பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் கிராமசேவையாளர்கள் சிலர் முன்மாதிரியாக செயற்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் வல்வெட்டித்துறைகிராம சேவையாளர் ஒருவர் தனதுமுயற்சியாலேயே நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு தற்காலிக தங்குமிடங்களை ஒழுங்குசெய்து கொடுத்துள்ளார்.

பளை, சாவகச்சேரி, மருதங்கேணி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வல்வெட்டித்துறைப் பகுதி ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தங்கியிருந்த 175 குடும்பங்கள் மேற்படி கிராமசேவையாளரின் முயற்சியினால் ஆட்களற்ற வீடுகளில் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க, கிராமசேவையாளர்கள் சிலர் இடம்பெயர்ந்த மக்கள் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்வதாகவும் பொதுமக்களில் சிலர் கவலை தெரிவித்துள்ளனர். (உ-43)

## யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்தியர்கள் பற்றாக்குறை

யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்தியர்கள் பற்றாக்குறை ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியர்கள் சிலர் சொந்தக்காரணங்களுக்காக வெளிமாவட்டங்களுக்கு செல்ல வேண்டியுள்ளதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [க-12]

இன்று ஒரு தகவல்

## புலன்கள் இருந்தும் அவை எண்ணத்தின் தன்மையில் தடுமாறுகிறது

ஒரு ஊரில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் திருமணம் முடித்துஒரு பெண் குழந்தைக்கு தந்தையான வன்.

ஆயினும்இவர்கள் மூவருமே செவிடுகள், அதாவது செவிப் புலன் அற்றவர்கள்.

விவசாயி ஆன செல்லப்பன் அதிகாலையிலே தனது மாடு களை மேய்த்துக் கொண்டு வயலுக்கு போய் விடுவான். அவன் போனதும், அவன் மனைவி கமலம் தனது வீட்டு வேலைகளை கவனிப்பதில் பொழுதைப் போக்குவாள்.

அவன் மகள் ஆன 18 வயது நிரம்பிய விதுஷா தன்னை அலங்கரிப்பதிலும், தையல் வேலையில் ஈடுபடுவதிலும் காலத்தை கழிப்பாள்.

ஒரு நாள் தன்னிடம் உள்ள இரு மாடுகளைப் பூட்டி வய லைச் செல்லப்பன் உழுது கொண்டு நின்றான். அப் போது அவ்வழியூடாக ஒரு புலவர் வந்தார்.

'இவ் வழிபோனால் எவ்வழி போகலாம்' எனக்கேட்டார். உடனே செல்லப்பன் 'கறுப் பியை' தருவனே தவிர சிவப் பியை தரவே மாட்டேன்' என்று கூறினான் புலவர் மீண் டும் அதனையே கேட்டார். ஏனெனில் அவருக்கு செல்லப் பன் செவிடன் என்பது தெரி யாது.

செல்லப்பனோ 'சத்திய மாய் தரமாட்டேன்' என்று உறுதியாக கூறிவிட்டான்.

புலவர் ஒன்றும் புரியாமலே விழித்துக் கொண்டு வந்த பாதையூடாக சென்று விட் டார்.

கமலம்மதியச் சாப்பாடான பழஞ்சோற்றுடன் கணவனை நாடி வயலுக்கு வந்தாள்.

அவளை கண்டதும், கண் களில் பெருமிதம்பொங்க இவ் வழியூடாக ஒரு புலவர் வந் தார். அவர் என்னுடைய சிவப்பியைக்கேட்டார். நான் தரமாட்டேன்' என்று கூறி னேன் என்றான், செல்லப்ப னுக்கு எப்போதும் தன்னிட முள்ள சிவம்புக் காளை மீது ஒரு பெருமித மகிழ்ச்சியும் ஆசையுமுண்டு.

உடனே கமலம் 'சத்திய மாய் நாங்கள் கொழுக் கட்டை அவிச்சுப் சாப்பிட வில்லை. பழஞ்சோறுதான் சாப்பிட்டோம்' என்றாள்.

பின்னர் கணவனுக்கு சாப் பாட்டை கொடுத்து விட்டு வீட்டிக்குச் சென்று மகளிடம் 'எடியே பிள்ளை கொப்ப னுக்கு நாங்கள் கொழுக் கட்டை அவிச்சு தின்றது தெரிஞ்சு போச்சு' என்று அச் சத்துடன் கூறினாள் கமலம்.

உடனே மகள் அம்மா நீங் கள் யாரைப் பேசி கொண்டு வந்தாலும்' நான் இருமணம் முடிக்கத்தயார்' என்று கூறி னாள்.

மூன்று செவிப்புலன் அற்ற வர்களும் கூடி வாழ்ந்த போதும் அவர்கள்மனப்புலன் கள் வெவ்வேறு திசையிலே போய்க் கொண்டிருக்கின் றன.

ஒவ்வொரு மனிதனும் புலன்கள் இருந்தும், தன் மனத்திற்குள் இருக்கும் எண் ணங்களினால் புறச் சூழலு டன் இயவடையவும் தன்னை மாற்றவும் சில வேளைகளில் தவறி விடுகின்றது இயல்பே. அதற்கு எல்லாம் காரணம் மனத்தின் எண்ணக்கருவே ஆகும்.

தென்கச்சி சுவாமிநாதன்

## நல்லையில் சொற் பொழிவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையின் நல்லைக் கந்தன் உற்சவகால தெய்வீகநிகழ்ச் சிகள் தொடரில் இன்று சனிக்கிழமை 'சமயவாழ்வு' என்னும் தலைப்பில் புலவர் க. திருநாவுக்கரசு சொற் பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பி. ப. 2.00 மணிக்கு இடம்பெறவுள் ளது. (செ)

## வருடாந்த நவநாள் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி புனித பரலோக அன்னை ஆலய வருடாந்த நவ நாள் திருவிழா இறுதி நவ நாள் வழிபாடு இன்று சனிக் கிழமை திருப்பலி, நற்கருணை வழிபாடு என்பவற்றுடன் இடம் பெறவுள்ளது.

திருவிழாத் திருப்பலி நளை ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜே. பீ இ. செல்வராஜா அடிகளாரால் ஒப்புக் கொடுக் கப்படும்.

திருப்பலியைத் தொடர்ந்து திருச் சுருப பவனியும்ஆசிரும் இடம்பெறவுள்ளது. (செ)

## கால் நடை வளர்ப்போர் கவலை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைகால்நடை வளர்ப்யோர் கூட்டுறவுச் சங் கம், செயற்பாடுகள் எதுவும் அற்ற நிலையில் காணப்படுவ தாகவும் அதனால் கால்நடை வளர்ப்போர் பெரும் பின்ன டைவுகளை எதிர்நோக்கியி ருப்பதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இதனால் நல்லின கால் நடைகளை வளர்ப்பது பற்றி யும், அவற்றிற்குரிய சிகிச்சை முறைகள் பற்றி அறிய முடி யாமல் இருப்பதாகவும் பெரி தும் கவலை தெரிவிக்கின்ற னர். (செ-75)

## நல்லூரான் திருவடிக்கு - 15



## நல்லை முருகனின் அற்புத வாசகம்

ஓம் முருகா நல்லை முருகா-போற்றி
ஓங்கார ஒலியானவனே போற்றி போற்றி
ஆறு மலை கொண்டவனே போற்றி
ஆதியானவனே போற்றி போற்றி
வேலவனே போற்றி போற்றி
வேலெடுத்தவனே போற்றி போற்றி
ஆதி சக்தியின் மைந்தனே போற்றி
ஆதி சங்கரின் குருவானவனே போற்றி
நல்லை வாழ் அம்பதியே போற்றி
நலமுடன் வாழ வழி செய்வாய் போற்றி
வீட்டின் காவலனே போற்றி
வீரத்தின் வேங்கையே போற்றி
ஆனைமுகன் தம்பியே போற்றி
ஆணவத்தினை அழித்தவனே போற்றி
ஓசையெல்லாம் ஆனாய் போற்றி
ஓர் நாள் ஆண்டியாய் நின்றாய் போற்றி
வேண்டியவற்றைத் தருபவனே போற்றி
வேண்டாதவற்றை நீக்குபவனே போற்றி
நல்லைக்கு அரசனே போற்றி
நல்லவர் உள்ளத்தில் உறைபவனே போற்றி
வீணையில் நாதமானவனே போற்றி
வீதியால் சுற்ற வைத்தவனே போற்றி
ஓதிய பொருளெல்லாம் நீயே போற்றி
ஓதாமல் வழிபடும் இறைவா போற்றி
வேண்டும் போது ஓடி வருவாய் போற்றி
வேதனைகள் தீர்ப்பாய் போற்றி
நல்லைக்கு எல்லையானவனே போற்றி
நல்லூரின் பிள்ளையானவனே போற்றி
வீர மயிலை வாகன மாக்கினாய் போற்றி
வீர சூரனை போரில் வென்றாய் போற்றி.

தீ. ரஜனிகாந்த்

## நல்லூரில் அருள்வாய் நாதா

தினமும் உந்தன் திருக்கோலம் கண்டு
தீந்தமிழால் உன்னை அர்ச்சித்து மகிழ்வோம்
போரோய்ந்து மண்ணில் கொலை, களவு, கைது
புதைகுழிகள் யாவும் இல்லாமல் வேண்டும்
சீரேந்தி வாழ்வு சிறப் போடு மலர்ந்து
செந்தமிழர் நிலமிங்கே சிறந்தாக வேண்டும்
பாரேந்தி உன்னை பைந்தமிழால் வாழ்த்த
பக்தர்களை காத்து நல்லூரில் அருள்வாய்

மதுரகவி காரை. எம் பி.
அருளானந்தன்

## அழகு வேலன் பவனி வருகிறான்

அன்புக் கதிர்வேலன் வலம் வருகிறான்
ஆடி வடிவேலன் ஆடி வருகிறான்
இன்பம் திளைத்திட ஓடி வருகிறான்
ஈரநெஞ்சம் வளர பவனி வருகிறான்.

உத்தம குணம்துலங்க ஓடி வருகிறான்
ஊரெலாம் புகழ்பாட வீதி வருகிறான்
எம்தமிழர் நெஞ்சம்மகிழ பவனி வருகிறான்
ஏரெடுத்து ஞாலம் வாழ ஏந்தல் வருகிறான்

ஐயர்கள் வேதமோத அப்பன்சாமி வருகிறான்
ஒண்டமிழ் வாழத் தமிழருடன்ஆடி வருகிறான்
ஓங்கார நாயகனின் தம்பி வருகிறான்
ஔவையிடம் தமிழ்நுகர்ந்த அப்பன் வருகிறான்

சி. பா. சக்திநாதன்

## நல்லூர்க் கந்தன் பாமாலை

பற்றின் மயக்கத்தாற் பக்தரெல்லாம் நல்லூரில்
சுற்றிச் சுழன்று தொழுகின்றார் - மற்றவர்கள்
பார்த்துப் பரவசத்தாற் பாடுகிறார் ஆடுகிறார்
ஆர்க்கும் ஒலிகளுக்குள் ஆழ்ந்து
விக்கிரகம் நல்லூரில் வீதி வலம் வரவே
அக்கிரமம் போகும் அமைதி வரும் - பக்குவத்தை
ஆறுமுகன் வாயில் . அமர்ந்து தியானிக்கத்
தேறுமே உள்ளந் தெளிந்து.

இறைமணி
சி. இராசரத்தினம்

# ஊடகவியலாளருக்கு ஓய்வூதியம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கு விசேட ஒய்வூதியத்திட்டம் ஒன்றினை அமுல் செய்வதற் கான அங்கீகாரத்தினை அமைச்சரவை வழங்கியுள் ளது.

நேற்று முன்தினம் ஜனாதி பதி தலைமையில் அலரி மாளி கையில் இடம்பெற்ற அமைச் சரவைக் கூட்டத்தின் போது இது தொடர்பான ஆலோ சனைகளை அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்தார்.

அந்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், சகல உழைக்கும் பத்திரிகையாளர் களும் ஒய்வூதியம் பெறும் வகையில் நிதியம் ஆரம்பிக் கப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இக்கட்டான சந்தர்ப்பங்களிலும் தம் உயிரை பொருட்படுத்தாது கடமையாற்றும் இவர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்பட வேண்டும். பல்வேறு தரப்பின ராலும் சுட்டிக் காட்டப்பட்டு வந்ததையடுத்து இம் முயற்சி முன்னெடுக்கப்பட்டு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கி யமை இங்கு குறிப்பிடத்தக் கது. (க-உ)

## மட்டக்களப்பு வைத்தியசாலை அபிவிருத்திப் பணிகள் அடுத்தமாதம் பூர்த்தியாகும்

### பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சுமார் 2 கோடி 50லட்சம் ரூபா செல வில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப்பணிகள் அனைத்தும் அடுத்தமாதம ளவில் பூர்த்தி செய்யப்படும் என தபால் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச் சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல் லா அறிவித்துள்ளார்.

இவ் வைத்தியசாலை அவ சரசிகிச்சை விடுதி, சிறுவர் விடுதி, பெண்கள் பிரிவு என் பன அமைக்கப்பட்டு வரு கின்றன. (சு-60)

## பிரயாணப்படி வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுத்தி உத்தியோகத்தர் களுக்கு பிரயாணப்படி வழங் குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு கிறது.

இதற்கமைய, மேற்படி உத் தியோகத்தர்கள் நியமனம் பெற்ற நாள் முதல் மேற் கொண்ட செயற்பாடுகளை அட்டவணைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, சண்டிலிப் பாய் பிரதேச செயலர் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர் களுக்கு இவ்வருடத் தொடக் கத்தில் இருந்தே பிரயாணப் படி வழங்கப்படவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. (உ-12)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சிறை வைக்கப்பட்ட வீரப்பனின் சகாக்கள்

# தமிழக அரசின் உத்தரவை ஏற்க மறுப்பு

## சிக்கல் நிலையில் மாநில மத்திய அரசுகள்

(புதுடில்லி)

கன்னட நடிகர் ராஜ்குமார் உள்ளிட்ட நால்வரின் விடுதலை மற்றும் புதுடில்லி அரசுக்கு புதிய பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது.

ராஜ்குமாரின் விடுதலை தொடர்பாக சந்தன மரக் கடத்தல் வீரப்பனால் இறுதியாக முன்வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் தமிழகச் சிறையில் உள்ள வீரப்பன் சகாக்கள் ஐவரின் விடுதலை அரசியல் தலைமைகளிடையேயான பெருங் குழப்பங்களுக்கு வித்திட்டுள்ளது.

தமிழ் நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த வெங்கடேசன் தமிழ்த்தேச மீட்புப் படையைச் சேர்ந்த சத்திய மூர்த்தி, முத்துக்குமார், மணிகண்டன் ஆகியோர் தாம் பிணையில் வெளிவரப் போவதில்லை என தமது வழக்கறிஞர் மூலம் கூறியுள்ளனர்.

திருச்சி சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் மேற்படி நால்வரினதும் நிலைப்பாடு இதுவென்பதால் கோவை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பொன்னி வளவனின் நிலைப்பாடும் இதுவாகஇருக்கலாம் என நம்பப்படுகிறது.

தங்கள் மீதான வழக்குகள் அனைத்தும் எந்த விதமான நிபந்தனையுமின்றி அரசு வாபஸ் பெறவேண்டும்.

இல்லையேல் சிறையில் இருந்தே வழக்குகளை எதிர் கொள்வோம் எனவும் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு தாம் விடுதலையாகும் பட்சத்தில் காட்டுக்கு செல்லும் பொழுது பத்திரிகையாளரும் கூடவே வரவேண்டும் எனவும் தமது சட்டத்தரணி மூலமாக அறிவித்துள்ளனர்.

அத்துடன் உயர்நீதிமன்றம் பிணையில் விட்டாலும் அவற்றை வாபஸ்பெற தமிழக அரசின் உத்தரவு வேண்டும்.

இவற்றில் சில மத்திய அரசு சம்பந்தப்பட்டவையாகையால் வழக்குகளை நிபந்தனையின்றி வாபஸ்பெறுவது மத்திய அரசுக்கு தர்மசங்கடத்தை உருவாக்கும் என்பதுடன் எதிர்க்கட்சிகளின் கண்டனங்களையும் சந்திக்க வேண்டிய நிலையேற்படும்.

இவை மேற்படி ஐவரினதும் விடுதலை தொடர்பான தாமத நிலையையும், மத்திய மாநில அரசுகளுக்கிடையே சங்கட நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலை கன்னட நடிகர் ராஜ்குமாரை சந்தனக் கடத்தல் வீரப்பன் விரைவில் விடுவிப்பார் என்று பரவலாக உருவாகியிருந்த எண்ணப்பாட்டில் சந்தேக நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இதேவேளை, நக்கீரன் ஆசிரியர் கோபால் நடிகர் ராஜ்குமார் விடுதலை தொடர்பாக கலந்துபேசவென சந்தன மரக்கடத்தல் வீரப்பனிடம் மீண்டும் காட்டுச்கு சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

## ஒரேவீட்டில் 5 பேர் சுட்டுக் கொலை

[ஜோர்ஜ்]

தென்னாபிரிக்காவிலுள்ள ஒரு கிராமத்தில் வீடொன்றில் வாழ்ந்த 18 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்ட 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

80 எம்.எம் துப்பாக்கியால் மூர்க்கத்தனமாகத் துடிக்கத் துடிக்கச்சுட்டதில் அதேஇடத்தில் 5 பேருர் இறந்ததாகக் காவல்துறை அதிகாரி விஷ்ணு நாயுடு தெரிவித்தார்.

(து)

## எட்டு ரஷ்ய மாலுமிகள் கனடாவில் தஞ்சம்

(ஒட்டாவா)

ரஷ்ய மாலுமிகள் எண்மர் அகதி அந்தஸ்து கோரி, கனடாவின் கலுக்காஸ் துறைமுகத்தில் நீந்தி கரை சேர்ந்திருப்பதாக கனடா குடிவரவு பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் பதிவு செய்யப்பட்ட கப்பல் ஒன்றில் வந்த மேற்படி 8 மாலுமிகளும்நடுக் கடலில் கப்பலில் இருந்து குதித்து கனடா துறை முகத்தில் நீந்திக்கரை சேர்ந்துள்ளனர்.

இம்மாலுமிகளுடைய புகைப்படங்கள் கைரேகை என்பன பதியப்பட்டு, விசாரணைகளுக்குட்படுத்தி வருவதாக குடிவரவுத்துறைப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

[உ]

## பிஜியின் முன்னாள் தலைவருக்கு ஹரியானாவில் மகத்தான வரவேற்பு

[சென்னை]

பிஜியின் முன்னாள் தலைவர் மகேந்திர சௌத்திரி ஹரியானாவில் தனது பிறந்த வீட்டுக்குச் சென்ற பொழுது வளைவுகளாலும் ஆயிரக்கணக்கான மக்களாலும் வரவேற்கப்பட்டார்.

வீதியில் பிஜி இந்திய கொடிகளுடன் மக்கள் நின்று மிகுந்த ஆரவாரத்துடன் வரவேற்றார்கள்.

ஹரியானா முதல்வர் அரச மரியாதைகளுடன் முறைப்படி சௌத்திரியை வரவேற்றார்.

மகேந்திர சௌத்திரி தன்னை வரவேற்ற ஹரியானா மக்களையும் அரசையும் நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்து உரையாற்றினார்.

[து]

## இஸ்ரேல் பிரஜைகளாக மாற விரும்பும் பலஸ்தீனர்

[ஜெருசலேம்]

பலஸ்தீனியர்கள் பலர் இஸ்ரேல் பிரஜைகளாக மாறுவதில் பெரு விருப்புக் கொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு ஜெருசலேம் பகுதியில் வாழும் பலஸ்தீனியர் அனேகம் பேர் இஸ்ரேலிய பிரஜைகள் ஆகுவதற்கான விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

இதனையடுத்து, இஸ்ரேல் பிரஜைகளாக மாற விருப்பம் தெரிவித்த எவருக்கும் மலரப் போகும் சுதந்திர பலஸ்தீனத்தில் வாழ ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என பலஸ்தீன விடுதலை அமைப்பு கண்டிப்பான எச்சரிக்கை விடுத்துள்ளது.

(உ)

## பிறேசில் பயணிகள்

## விமானத்தைக் கடத்திய கொள்ளையர் அகப்பட்ட பொருளுடன் தப்பியோட்டம்

[லண்டன்]

தென் அமெரிக்க நாடான

பயணிகளிடம் பணம் நகை என்பவற்றைக் கொள்ளை

## செய்திப்பரல்

★ மீண்டும் இந்தியாவிற்கும் ஹிஸ்புல் முஜாகுதின் இயக்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் தொடர இருக்கின்றன.

★ கொன்கோட் விமானக் கம்பனியினர் விமானம் பற்றிய உறுதிமொழிகளை மக்களுக்கு எடுத்துக்கூறவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

★ இந்திய மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சர் சுந்தர்லால் பட்சாஷி திடீர்நோய் காரணமாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

★ கர்நாடக கிறிஸ்தவ தேவாலயங்கள் குண்டுத்தாக்குதல் தொடர்பாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

★ வருமானத்துக்கு அப்பால் சொத்துச் சேர்த்த வழக்கில் குற்றங்கள் நிரூபிக்கப்படாததால் அ இ அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சத்திய மூர்த்தி விடுவிக்கப்பட்டார்.

★ நேபாளத்தில் பெய்து வரும் மழை வெள்ளத்தால் 10 பேர் உயிர் இழந்துள்ளனர். (து)

## அபாயமான கட்டத்தில் அமைச்சர் குமாரமங்கலம்

## வைத்தியசாலை வட்டாரங்கள் கைவிரிப்பு

(புதுடில்லி)

இந்திய மத்திய மின்சாரத் துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்தின் உடல் நிலை மிகவும் அபாய கட்டத்தை அடைந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய மருத்துவ மனையில் விசேட சிகிச்சைப் பிரிவில் இருக்கும் அவர் நினைவிழந்த நிலையில் இருக்கிறார் என்றும் பல உறுப்புக்கள் செயலிழந்து விட்டன என்றும் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை 48 வயதான ரங்கராஜன் குமார மங்கலம் கடந்த சிலவாரங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தாரென்றும் இந்நோயின் தாக்கம் பற்றி இன்னும் கண்டறிய முடியவில்லையென்றும்தெரிவிக்கப்படுகிறது.

இந்திய உப ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் பலரும் இவரை மருத்துவமனையில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

[து]

## புதியதமிழகக் கட்சி மகாநாடு ஒக்டோபரில்

புதிய தமிழகக் கட்சியின் மாநில மகாநாட்டை திருச்சியில் ஒக்டோபர் 1ஆம் 2ஆம், திகதிகளில் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் தீப்பெட்டித் தொழிற் சாலைகளில் இயந்திர மயத் தன்மையை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தத்தீர்மானித்திருப்பதாக

தென் அமெரிக்க நாடான பிறேசிலில் போயிங்ரக பயணிகள் விமானம் கடத்தப்பட்டுள்ளது.

பரகுவே நாட்டின் எல்லைப்புற விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டபோது இவ் விமானம் கடத்தப்பட்டுள்ளது.

விமானத்தில் இருந்த என்பவற்றைக் கொள்ளையடித்த பின்னர் கடத்தல்காரர் தப்பியோடிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது போதிலும் கடத்தப்பட்ட விமானம் பற்றியோ அல்லது அதில் இருந்த பயணிகள் பற்றியோ விபரம் ஏதும் அறியப்படவில்லை. (உ)

## குழந்தைகள் திரைப்பட விழாவில் பலமொழிப் படங்கள் ஒளிபரப்பு

(புதுடில்லி)

குழந்தைகளுக்கான திரைப்படவிழா நேற்று புதுடில்லியில் ஆரம்பமானது.

இந்தியாவில் தேசிய விருது பெற்ற 'தகோட்' என்ற திரைப்படம் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறுகின்ற இந்த திரைப்பட விழாவில் குழந்தைகளுக்கான ஈரானிய திரைப்படங்களும், இந்தியாவின் பல மாநிலப்படங்களும் திரையிடப்பட்டு வருகின்றன. [து]

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ரூபா 2ஆயிரம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்துசண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருந்த குடும்பங்களுக்கான 2ஆயிரம் ரூபா அண்மையில் வழங்கப்பட்டன.

அப்பிரதேச செயலாளர் பிரிவின் J/130, J/137, J/140, J/146 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 462 குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இவ் இரண்டாயிரம் ரூபா பெற்றுக் கொள்ளாதோருக்கான கொடுப்பனவுகள் அடுத்தவாரமளவில் மேற்கொள்ளப்படலாம் என்று பிரதேசசெயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-12)

குறிப்பிட்டார். [து]

தமிழக அரசு

## வீரப்பனின் கோரிக்கையை ஏற்றதை எதிர்க்கிறார் பாண்டியன்

(சென்னை)

சந்தனமரக்கடத்தல் வீரப்பனின் கோரிக்கையை ஏற்று தமிழக அரசு 5 தீவிரவாத

உலக தரிசனம்

தடா கைதிகளையும் விடுவிப்பதை ஆட்சேபிக்கிறேன் என்று அனைத்து இந்திய அ. தி. மு. க. உறுப்பினர் சி. எஸ். பாண்டியன் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில்: வீரப்பனைப்பிடிக்க தமிழக அரசால் முடியவில்லை என்பதால் கைதிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள் என்றும் இதனால் தீவிரவாதம் தலை தூக்கும் என்றும் உடனே மத்திய அரசு இது விடயத்தில் தலையிடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்கும் எதிர்ப்புத் தெரிவித்த தி.மு.க. உறுப்பினர்கள் இந்த விடயம் மிகமுக்கியத்துவம் வாய்ந்ததால் இதனை அவையில் எடுக்க அனுமதிக்கவேண்டாமென்று சபாநாயகரைக் கேட்டுக் கொண்டனர். (வ)

## சிசெல்ஸ் நாட்டு வானொலியில் இந்து சமய நிகழ்ச்சிகள்

[நல்லூர்]

சிசெல்ஸ் நாட்டின் வானொலிஒலிபரப்புச்சேவையில் இந்துசமய நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருவதாக, சிசெல்ஸ்இந்துக் கோவில்சங்க அருள் மிகுநவசக்தி விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த வி.சிவ சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6.15 மணி முதல் 6.30 மணி வரைஇடம் பெற்றுவரும் இந்து சமய நிகழ்ச்சிகளில், நாதஸ்வரம், பண்ணிசை, சொற்பொழிவு என்பன இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேவார இசைமணி- அருளையரசு தாவடியூர் எஸ்.ஆர். திருஞானசம்பந்தனின் தேவாரப் பண்ணிசை இதில் ஒலித்து வருவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். [க-து]

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்

-குறள்

## வலம்புரி

### இலக்கைத் தவறவிட்ட....

கல்வி என்பது அறியாமையை அகற்றி உள்ளத் தெளிவையும் உயர்வையும் தருவது. கல்விக்காக உலகின் எந்த நாடுகளிலும் செலவிடும் பணம் கணிசமானதாகும். எங்கள்மூன்றாம் உலக நாடாகிய இலங்கையிலும் கல்விக்கான செலவினம் கணிசமானதே. யுத்த பூமியிலும் மக்கள் பாரிய குறிக்கோளுடன் கல்வியைப் பெற முண்டியடிப்பது நாடறிந்தவிடயம். இந்தச் செலவினமும் அக்கறையும் ஏன் என்றுஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

ஆரோக்கியமான சமுதாயத்தைச் கட்டியெழுப்பினால் அனைத்தும் சிறப்புறும் என்பது அனுபவவாயிலாகக் கண்டறிந்த உண்மை. ஆற்றலும் தூய மனப்பாங்கும் வளர கல்விக் கூடங்கள் பெரும்பங்காற்றுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக பூரணத்துவத்தைப் பெற பல்கலைக்கழகம் உண்டு. இங்கே மாணவர்கள் ஒரு கட்டுக் கோப்புடன் சமுதாயத்தை வழி நடத்தும் ஆற்றல் உடையவர்களாக வெளியேற வேண்டும்.

அதை விடுத்து குடும்ப நிலைபுரியாத குடிப்பழக்கமுள்ள அருவருக்கத்தக்க பலரைநாம மாணவர்கள் மத்தியில் காண்பது வேதனைக்குரியது.

'ராக்கிங்' என்ற இறக்குமதி செய்யப்பட்ட நோய் இன்று ஏன் எதற்கு என்ற விவரணமில்லாது நடந்தேறுகிறது எங்கள் பண்பாடு காற்றில்பறக்கிறது. எங்கள் வரவேற்பும், கலந்து உறவாடலும் இத்தகையதல்ல. ''மோப்பக் குழையும் அனுச்சம் முகம் திரிந்து நோக்கக்குழையும்''

# கும்பத்து நீரை இறைவன் வீதியுலா முடிந்தபின்
# வீதியில் ஊற்றுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதா?

அண்ட சராசரங்கள் எல்லாம் வீற்றிருந்து அருள் பாலிக்கும் இறைவன் தெய்வ சந்நிதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் இடமே திருக்கோயில்.

ஆன்மா இறைவனிடம் வயப்படும். இடமும் ஆலயமாகும்: இறைவன் எங்கும் நிறைந்தவனாய், இருக்கின்ற போதும் ஆன்மாக்களை உய்விக்கும் இடமாகவும், அருள் பாலிக்கும் தலமாகவும் ஆலயம் விளங்குகின்றது. இதனையே சிவஞான பேதம் 12 சூத்திரம்,

''மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும்அரனெனத் தொழுமே''

எனக்கூறுகிறது.

ஓராதார் உள்ளத்துள்ஒளிக்கும் ஒளியானாய் விளங்கும் இறைவனை நாம் எப்படி? எங்ஙனம்? எவ்வாறெல்லாம் வழிபடல் தகும், அதன் பயன் எத்தகையவை என நாம் சற்று உற்று நோக்க வேண்டும்.

### திருக்கும்பச்சிறப்பு

இறைவன் வீதியுலா வரும் காலங்களில் நாம் பூரண நிறை கும்பங்களும், பிரசாதங்களும்வைத்து இறைவனை வரவேற்பதுவழமை வீதியுலா முடிந்து இறைவன் ஆலயப் பரப்பின் உள் நுழைந்ததும், நாம் வைத்த கும்பநீரை இறைவன் வீதியுலா போன வழியில் ஊற்றல் தவறனது ஆகும்.

இறைவன் ஒப்பற்ற ஓங்காரப் பொருளானவன். அவன் வரவிற்கு பின்னர், அப்புனித நீரை வீதியில் ஊற்றும் செயல் நாம் மயானத்திற்கு சென்று பீதிர்கடன் முடித்து கால்கழுவி உள் நுழையும் செயலுக்குச் சமனானது.

திருவிழா தொடங்கிய காலத்தின் ஆரம்பநாளில் வைத்த கும்பத்தின் நீரை பழுது பட்டால் மாத்திரமே மாற்றவேண்டும். அவ்வாறு மாற்றும்போது அதனை கால் படாத இடத்தில் பயன் தரு மரங்களின் கீழ் ஈசானமூலை நோக்கி ஊற்றலாம்;

கும்பத்தினை வைக்கும் போது பயன்படுத்திய தேங்காயே திருவிழா முடியும் வரை பயன்படுத்தி இறுதி நாளன்று சண்டேஸ்வரர்க்கு உடைத்து தமது பழவினைகளைப் போக்கிக்கொள்ள வேண்டும்;

நீர், மாவிலை, குடம், அரிசி, வாழையிலை, நெல், மலர் என்பன ஒருங்கே சேர்ந்ததே பூரண கும்பம். தலைவாழையின் குருத்துப் பக்கம்வலக்கையின் பக்கமாக அமையும் வகையில் கும்பம் வைத்தல் வேண்டும்.

### அபிஷேகத்தின் பயன்

இறைவனுக்கு அபிஷேகம் செய்யும்போது ஒவ்வொரு பொருளும் எத்தகையபயனை நல்குவன என அறிந்திருத்தல் நலமே. பாலால் அபிஷேகித்தால் நீண்ட ஆயுளும், இளநீரால் அபிஷேகித்தால் உயர் பதவியும், தயிரால் அபிஷேகித்தால் நட்புத்திர பேறும், பஞ்சாமிர்தத்தால் அபிஷேகித்தால் வெற்றியும், தேனால் அபிஷேகித்தால் சரஸ்வதி கடாட்சமும், பழரசத்தால் அபிஷேகித்தால் யமபய நீக்கமும், கருப்பஞ்சாற்றால் அபிஷேகித்தால் ஆரோக்கியமும், நெய்யால் அபிஷேகித்தால்மோட்சமும், நல்லெண்ணெயால் அபிஷேகித்தால் சுகவாழ்வும் சந்தனத்தால் அபிஷேகித்தால் சாயுட்ச மோட்சமும்கிட்டும்.

### வழிபாட்டின் பயன்

திருவீதியை வலம் வருவதால் ஆன்மாவை தாங்கி இருக்கும் பாவம் தேய்ந்து இறை வியாபகம் உண்டாகும்.

நிலத்தில் வீழ்ந்து வணங்குவதால் ஆன்மா இறைவன் உடன் அத்துவித நிலையில் கலக்கும்.

காலையில் திரு விதியினை வலம் வந்தால் நோய் நீங்கும், உச்சி பொழுதில் வலம் வந்தால்விரும்பிய சித்தி உண்டாகும். சாயங்காலத்தில் வலம் வருவதால் சர்வபாவ நீக்கம் கிட்டும், அர்த்தசாமத்தில் வலம் வருவதால் வீடு பேற்றை அடையலாம்.

அங்க பிரதட்சணம் செய்வதால் தீவினை நீங்கி முத்தி இடைக்கும்.

அர்ச்சனை செய்விக்கும் நிவேதன பொருட்களில், அர்ச்சகரால் ஓதப்படும் வேத மந்திரத்தால் திருவருட் சக்தி தோன்றி நிவேதன பொருளில்இறைஞானம் தோன்றும்; இவ்வாறு திருவருள் பாலிக்கப்பட்ட நிவேதன பொருட்களை பிரசாதமாய் வழங்குவார். அப்பிரசாதத்தை யாம் வேண்டி அணிவதாலும், உட்கொள்ளுவதாலும் எம்மில் திருவருள் பதியும்;

சிவாச்சாரியாரை வணங்கி விபூதி பெறல் இறைவனிடமிருந்து திருவருளை பெறுவதற்குச் சமனானது:

**தர்மினி**

ஊர்கள் தோறும் அமைந்திருக்கும் ஆலயத்தை மையமாகக் கொண்டே எங்கள் பண்பாடு கலாச்சாரங்கள் வளர்ச்சியடைகின்றன: ஒரு தலைமுறை பின்பற்றும் வழமையான சம்பிரதாயங்களே மற்றைய தலைமுறையும் தழுவுகிறது;

ஆகையால் இந்துமதத்தின் தொன்மையும், பூர்வீகத்தையும் பேணிக் காக்கும் வகையில் எங்களுடைய கிரிகைகளும், தொண்டுகளும்,இறைவணக்க முறைகளும் அமைவதே சாலச் சிறந்தது;

''நாடும் நகரமும் நற்திருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று பாடுமின்,பாடிப் பணியுமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வானே''

நல்லூர் வரலாற்றுக் கழக ஆதரவுடன்

# பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்கள்
# பேணும் நடவடிக்கை முன்னெடுப்பு

### நல்லூர் பிர. செயலகத்தில் கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

நல்லூர்வரலாற்றுப் பாரம்பரிய கழகத்தின் ஆதரவுடன் கல்வியங்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள இராஜதானி நினைவுச் சின்னங்களை புனரமைத்து பாதுகாத்தல்

தெரிவித்துள்ளனர்;

இப்பகுதியை உரிமை கொண்டாடுவது தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளேதான் இதுவரை இப் புனரமைப்பு பணிக்கு முட்டுக்கட்டையாக அமைந்த

சனிக்கிழமை காலை 9 மணிக்கு சட்டத்தரணி 'சாந்தா அபிமன்னு சிங்கம்' தலைமையிலான குழு அளவிட்டு நல்லூர் வரலாற்றுப் பாரம்பரிய கழகத்திடம் ஒப்படைக்கும் எனவும் கூறப்பட்

### மஹா கும்பாபிஷேகம்

(மந்துவில்)

விடத்தற்பளை புதுக்குளத்து அருள்மிகுகண்ணகை அம்மன் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது;

(செ-39)

### சனசமூக நிலைய திறப்புவிழா

(சங்கானை)

சென். பீற்றேஸ் சனசமூக நிலைய புதிய கட்டிட திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.3·00 மணிக்கு நடைபெறவுள்ளது.

திரிந்து நோக்குமையும்'' என்ற ரீதியில் வளர்ந்தவர்கள் நாங்கள்.

மிருகத்தனமும், மனிதரை மனிதராக மதிக்கத் தெரியாத தன்மையும் மலிந்தவர்களைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கக்கூடாது. சான்றோரால் எண்ணப்பட வேண்டாதவர்களாய்குடிப்பழக்கம் நாடும்மாணவசமுதாயமும் எங்களுக்கு வேண்டியதில்லை.

பண்பாடுபேணும் நல்லவர்கள் உருவாக வேண்டும். இன்றைக்கு மக்கள் படும் வேதனைக்குள்ராக்கிங் ஒருகேடாஎன்றே சிந்தையுள்ளவன் சிந்திப்பான். இந்த மாறுபட்ட சிந்தனையும் வெறியும் கொண்டவர்கள் திருந்த வேண்டும்; அன்றேல்திருத்தப்படவேண்டும். உயிராபத்துக்களை விளைவிக்கும் விசர் விளையாட்டுக்களை மனித நிலையில் நின்று மறப்பார்களாக.

அன்புடன் ஆசிரியர்

---

ரமைத்து பாதுகாத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில்; வண்ணைச் சிவன் ஆலய தர்மகர்த்தாவும், சட்டநாதர் ஆலய பரிபாலன சபையினரும் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் சத்தியசீலனும் கலந்து கொண்டனர்.

முப்பது வருடங்கள் பலராலும், பல கழகங்களாலும் முன்னெடுக்கப்பட்ட இச்சின்னங்களை புனரமைப்புக்கான முயற்சிகள் தற்போது வெற்றியளித்துள்ளதாக இக்கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண அரசின் இறுதி தமிழ் மன்னன் சங்கிலியனின் காலகட்டத்தில் நல்லூரில் உருவாக்கப்பட்ட மந்திரிமனை, முத்திரைச் சந்தியிலுள்ள பூதத்தம்பி வளைவு முத்திரை மண்டபம், யமுனா ஏரி என்பனவற்றை நல்லூர் வரலாற்றுக் கழகத்தின்,பாதுகாப்பு புனரமைப்பு பணிக்கு அளிப்பதற்கு இரு ஆலய நிர்வாக சபையினரும் சம்மதம்

முட்டுக்கட்டையாக அமைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் ஒல்லாந்தர்காலத்தில் வாழ்ந்த செட்டி ஒருவரினால் இந்நிலப்பரப்புகள் ஏலத்தில் விடப்பட்டபோது 50 சதத்திற்கு வாங்கப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலப்பரப்புகளை இன்று

படைக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சின்னங்களை பேணும் முகமாக மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பு முயற்சிக்கு பலதரப்பிலிருந்தும் ஆதரவு வழங்குவதுடன் பாராட்டுக்களும் கிடைத்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத்தலைவர் பொ.இம்மானுவேல் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (செ-16)

# வெற்றுக்காணிகளில்மாடுவெட்டுதல் தடைசெய்யப்பட வேண்டும்

## கோப்பாய் பொதுமக்கள் கோரிக்கை

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதியில் சட்டவிரோதமாக வெறுங்காணிகளில் அதிகாலை வேளையில் இறைச்சிக்கான மாடுகளை வெட்டும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட இவ்வாறான ஓர் சம்பவத்தினால் மாட்டின் கழிவுப் பொருட்களைக் கட்டாக்காலி நாய்கள் இழுத்துச் சென்று ஆலயச் சூழலிலும், அந்தணர்கள் வீட்டுக்கு குறுக்காகவும் போடுகின்றன.

இதனால் துர்நாற்றம் இப்பகுதிகளில் வீசுகின்றது.

இப் பகுதியில் ஆலய உற்சவங்கள் தற்பொழுது இடம்பெற்று வருவதனால் ஆலயச் சூழலை பாதுகாப்பதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டோர் கவனம் எடுத்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் வலியுறுத்தப்படுகிறது. (த-77)

## வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் பாலு மகேந்திராவின் ''மூடுபனி'' எனும் திரைப்படம்வீடியோக் காட்சியாக இன்று சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. ஆர்வமுடையோர் எவரும் இப் படக்காட்சிக்கு வருகை தர முடியுமென இணைப்பாளர், பேராசிரியர், இரா. சிவச்சந்திரன் தெரிவித்துக் கொள்கின்றார். (செ)

# அரசுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று பிரமாண்டமான ஊர்வலம்

[கொழும்பு]
அரசியல் அமைப்பு சீர்திருத்த சட்ட மூலத்துக்கும் அரசின் பிறகோற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று கொழும்பில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மாகாண சபையின் அமைச்சர் அலவி மௌலானா தலைமையில் இவ் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

## குறைகேள் செயலமர்வை நோக்கி யாழ். நகர வீதியினூடே நடந்த பேரணி

[யாழ்ப்பாணம்]
ஆரம்ப ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்ட சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் நேற்று யாழ். நகர வீதியினூடாக ஊர்வலமாக யாழ். மத்திய கல்லூரியைச் சென்றடைந்தனர்.

குறைகேள் சேவையில் தமது பிரச்சினைகளை முன்வைத்தனர்.

யாழ். புதிய உயர்கலைக் கல்லூரியிலிருந்து புறப்பட்ட இவ்வூர்வலத்தில் பெருமளவு பெண்கள் கலந்து கொண்டனர். (வ)

### பட்டமளிப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 6ஆம்திகதி நடைபெறவுள்ளது. [உ]

### ஐ தேகட்சியில்போட்டி

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய அபூபக்கர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ளார். [வ]

## ஈ. பி. ஆர். எல். எவ். அணிகளும் சுயேட்சையாகவே போட்டியிடும்?

[கொழும்பு]
ஈ.பி. ஆர். எல். எவ். இன் வரதர் அணிக்கும், சுரேஸ் அணிக்குமிடையில் இடம் பெற்றுவரும் வழக்கு அடுத்த மாதம் 4ஆம் திகதிக்குள் தீர்க்கப்படாவிட்டால் இரண்டு அணிகளும்சுயேட்சையாகவே தேர்தலில் போட்டியிட முடியுமென அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சுரேஸ் பிரேமச்சந்திரன் வன்னியிலும் போட்டியிடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நல்லூர் பிரதேச சபையினால் தென்னம் நாற்றுக்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பிரதேச சபையினால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தென்னம் நாற்றுக்கள் வழங்கப்படவுள்ளதாக அச் சபையின் தலைவர் க.மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ்தேவானந்தாவின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்படும் இத் தென்னம் நாற்றுக்கள் நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்டமக்களுக்கு வழங்கப்படவுள்ளதால் அவர்களின் பெயர் விபரங்களைத் தயாரித்து உடனடியாக சபையில் ஒப்படைக்குமாறு மணிபல்லவராஜன் கேட்டுள்ளார். (ந)

## பொ.ஐ.ஐ.மு.யாழ்ப்பாணத்தில் போட்டியிடும்

(கொழும்பு)
எதிர் வரும் பொதுத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணி யாழ்ப்பாணத்தில் போட்டியிடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அக்கட்சியின் செயலாளர் ஜயரட்ண தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்டஅமைப்பாளர் வேல்முருகு தங்கராஜா தலைமையில் இடது சாரிக் கட்சிகளையும் இணைத்து யாழ்ப்பாணத்தில் போட்டியிடுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதே வேளை சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் தங்கராஜா நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

### ஆயுதங்கள்......

வீ ஆனந்த சங்கரி மேலும் தெரிவிக்கையில் ஜனநாயக வழிக்கு திரும்பியவர்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏதும் இருப்பின் அவர்களுக்கு அரசு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றும் ஆனந்தசங்கரி தெரிவித்தார். (வ)

### பாராளுமன்றம்

பெற்று 18ம் திகதி புதிய பாராளுமன்றம் கூடுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 120 லட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பர்

பதினோராவது பாராளுமன்றத்தினை தெரிவுசெய்வதற்கான தேர்தலில் சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட 41 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் இத் தேர்தலில் குதிக்கவுள்ளனர்.

225 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில், 196 உறுப்பினர்கள் மாவட்ட ரீதியிலும், 29 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் ரீதியாகவும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

### 1994ல் பெற்ற வாக்கு விகிதம்

1994ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி 48.95 விதமான வாக்குகளும், ஐக்கியதேசியக்கட்சி 44.04 வீதமான வாக்குகளையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு இன்னமும் ஆறு நாட்கள் இருக்கத்தக்கதாக பாராளுமன்றத்தை முன்கூட்டியே ஜனாதிபதி வைத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (வ)

## யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆராய்ச்சிக்கு பெருமளவு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)
சீடாசரெக் நிதி உதவித் திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த உயிரியல் இரசாயனத்துறை ஆராய்ச்சிக்கு பெருந் தொகையான நிதி உதவியை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இந் நிதி பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி வசந்தி அரசரட்ணத்தின் மேற்பார்வையின் கீழ் ஆராய்ச்சிக்கு செலவு செய்யப்படவுள்ளது.

சீடாசரெக் நிதி உதவி யாழ். பல்கலைக்கழகத்திற்கு கிடைப்பது இதுவே முதல் முறையாகும். (வ)

## களஞ்சிய வசதி இன்றி புனர்வாழ்வுப்பகுதி அவலம்

(யாழ்ப்பாணம்)
யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியில் குருநகரில் உள்ள உணவுக்களஞ்சியத்தைக் கைவிட்டதை அடுத்து உணவுப்பொருட்களை களஞ்சியப் படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது காங்கேசன் துறையில் 7 ஆயிரம்மெற்றிக் தொன் உணவுப்பொருட்களுடன் தரித்து நிற்கும் உகனபுர கப்பலில் 6 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியும். ஆயிரம் மெற்றிக்தொன் சீனியும் இறக்கப்படுவதாகவும் அவற்றைக் களஞ்சியப்படுத்த போதிய இடவசதி இல்லாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புனர் நிர்மானம் செய்யப்பட்ட யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தற்போது அரிசி களஞ்சியப் படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

### வன்னி...

தாக்குதலை நடத்தி உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானத்தாக்குதல் காரணமாகஇப்பகுதியில்க. பொ. த. உயர்தரப் பரீட்சையில்தோற்றும் மாணவர்கள் மத்தியில் அச்சம் நிலவிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

### நீதியான......

தேசியக்கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறளை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நீதியானதும் நியாயமானதுமாக நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டும் என்றும் காமினி அத்துக்கோறளை தெரிவித்துள்ளார்.

### கூட்டணியின்

வன்னிமாவட்ட தேர்தல் களத்தில் கூட்டணியின் முதன்மை வேட்பாளராக ஓமந்தையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற சிவில் நிர்வாக அதிகாரி ஒருவர் நிறுத்தப்படவுள்ளார்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பேரும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தமூவரும், போட்டியிட உள்ளனர், மலையகத்தைச் சேர்ந்த ஒருவரும் பிரபல வர்த்தகர் ஒருவரும் வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## யாழ். செயலகத்தில் இயங்கா நிலையில் விலைக்கட்டுப்பாட்டு திணைக்களம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.செயலகத்தில்விலைக்கட்டுப்பாட்டுத்திணைக்களம் நிறுத்தல் அளவைத் திணைக்களம் இருந்தபோதும் அவற்றின் செயற்பாடுகள இல்லாமையினால் வர்த்தகர்கள் தம் இஷ்டம் போல் பொருட்களின் விலைகளைக் கூட்டி விற்பதாகவும், நிறுவையில் வெட்டுவதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போதும் மண்ணெண்ணை, பெற்றோல் ஆகியவற்றின் கட்டுப்பாட்டு விலையையும் மீறி கொள்ளை லாபம் வைத்து விற்பனை செய்யும் தெருவோர வர்த்தகர்கள் தொடர்பாக செயலகம் பார்த்துக்கொண்டு கண்டிக்காமல் இருப்பதும் மக்களுக்கு கவலை அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### பேராசிரியர்......

வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சிங்கப்பூர் செல்லவுள்ளார்.

சர்வதேச ரீதியாக ஐந்து கண்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மிகச்சிறந்த பல்கலைக்கழக துணைவேந்தர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

இம்மாதம் 28, 29, 30 ஆம் திகதிகளில் சிங்கப்பூர் நெவ் ஜாங் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள இம்மகாநாட்டில் உயர்கல்வித்திட்டம் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (வ)

### குறைந்த......

யாழ், சிவில் நிர்வாக சேவை காரியாலயத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இக் கப்பலில் நாலாயிரம் பயணிகள் ஒரேதடவையில் பிரயாணம் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை புறப்படவுள்ள இக் கப்பலுக்கான பயண அனுமதிச்சீட்டு இன்றும் நாளையும் காலை பத்து மணி முதல் வழங்கப்படவுள்ளது.

பயண அனுமதிச் சீட்டு பெறுபவர்கள் நாளை காலை 8-00 மணிக்கு பிரயாண ஆயத்தங்களுடன் யாழ். சிவில் நிர்வாக காரியாலயத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (வ)

### லெப். பாலசூரியா ...

புலனாய்வு இராணுவ அதிகாரியான லெப்டினண்ட் பாலசூரியா நேற்று அதிகாலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமானதாக வவுனியா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)


சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
வருடாந்த பொதுக்கூட்டம் - 2000

காலம்: 10-09-2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 10-00 மணி (இலங்கை நேரம்)
இடம்: யாழ் மத்திய கல்லூரி (தம்பர்மண்டபம்)

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் 27-8-2000 திகதிக்கு முன்பாக செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காவிடினும் இந்த அழைப்பினை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஜெ. முகுந்தன்
செயலாளர்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
பிரசாந் சிம்ரான் நடித்த
பார்த்தேன் ரசித்தேன்
CD பிரதி (புதியவெளியீடு)
காட்சி நேரம்
10-30, 2-00 (ப.நே)
[இ 688]

கஜன்
திரை
ஊர்காவற்றுறை
லிவிங்ஸ்டன் கௌசல்யா நடித்த
சொல்லாமலே
காட்சி நேரம்
பி.ப 8.30 மணி
(இ/652)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
2 வது மாதமாக காட்சியளிக்கும்
ரஜனிகாந்த், சௌந்தர்யா ரம்யாகிருஷ்ணன் நடித்த
படையப்பா
(ரீலிஸ்)
11.00, 2.30 [பு.நே]
(இ/666)


இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல: 15, [illegible] யாழ்ப்பாணம் [illegible] 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி [illegible]